1979 மார்ச் 3]

கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த தாளவாடியில் பட்டு நூல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி போன்ற பிற்பட்ட பகுதியில் பட்டுநூல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஆய்வில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது பிற்பட்ட பகுதியாக இருப்பதால், தனிப் பட்டோர் முயற்சியில் ஒரு பட்டுநூல் தொழிற்சாலையை அமைத்து அந்தப் பிற்பட்ட பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலாவது அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 11-1-1972-லிருந்து பட்டு நூற்பு தொழிற்சாலை ஒன்று தாளவாடியில் இயங்கி வருகிறது. இதனால் புதிதாக வேறு ஒரு தொழிற்சாலையை அரசு சார்பில் அமைப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தனி நபர்கள் முன் வந்தால் அவர்களுக்கு வேண்டிய அனுமதி வழங்குவதோடு அவர்களின் மொத்த மூலதனத்தில் பொருளாதார உதவியாக 25 சதவீதம் உதவித் தொகை கொடுத்து அந்தத் தொழிலை நிறுவுவதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவு செய்துள்ள சித்த வைத்தியர்கள்

*வினா எண் 214—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சித்த வைத்தியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் முறையைக் கைவிட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், போலி மருத்துவர்கள் பெருகி வருவதைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) 1970—ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மையக்குழு சட்டம் (Indian Medicine Central Council Act 1970) 17-வது பிரிவின் படி, அச்சட்டத்தின்கீழ் ''அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதி''

பெற்றவர்களை அப்பிரிவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட நாளான 1-10-76—க்குப் பின்னரும் சட்டபூர்வமாகப் பதிவு செய்ய முடியும். ஆனால் அத்தகைய ''கல்வித் தகுதி'' பெறாத பரம்பரை இந்தியமுறை மருத்துவர்களை தற்போது பதிவு செய்வதில் சில சட்ட நுணுக்கப் பிரச்சினைகள் உள்ளதால் அதுபற்றி மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 1-10-76—க்குப் பின்னர் போலி மருத்துவர்கள் இந்திய மருத்துவத்தொழில் புரிந்தால், 1970—ம் ஆண்டு இந்திய மருத்துவ மையக்குழு சட்டம் 17 (4) பிரிவின்படி ஓராண்டு வரை சிறை தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டிற்குமோ உள்ளாவார்கள். எனவே இச்சட்டத்தின் துணை கொண்டு போலி இந்திய முறை மருத்துவர்கள் பெருகி வருவதைக்கட்டுப்படுத்தலாம்.

[முற்பகல் 10-50]

திரு. என் கிட்டப்பா : தலைவரவர்களே, சித்த வைத்தியர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும் போது அதற்கான காலம் அதிகமாகத் தேவைப்படுகிறது என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் தற்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் பல விதிமுறைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னென்ன விதிமுறைகளின்கீழ் சித்த வைத்தியர்கள் முறைப்படி பதிவு செய்யப்படுகிறார்கள் இந்த அரசின் மூலமாக என்பதை அறிவிப்பார்களா? அதற்கான காலகட்டம் இப்போது நீண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அந்த காலகட்டத்தைக் குறைத்து, இன்னும் குறுகிய காலத்திலே தகுதிச் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, முறையாக இந்திய மருத்துவக் கல்வி பயின்றவர்கள் சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் தமிழ்நாட்டில் இந்திய மருத்துவ மையக் கழகத்தினால் கீழ்க் கண்டவாறு பதிவு செய்யப்படுகிறார்கள்:—

(1) பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள்— 'ஏ ஸ்பெஷல்'

(2) அரசு வழங்கும் டிப்ளமா பெற்றவர்கள் — 'ஏ'

(3) வாரியம் வழங்கும் சான்றிதழ் பெற்றவர்கள் — 'பி' பிரிவு.

(4) கிராம வைத்தியத்தில் சான்றிதழ் பெற்றவர்கள்— 'சி' பிரிவு.

இந்த வகையில் பதிவு செய்யப்படுகிறார்கள். பெரும்பாலான பரம்பரை வைத்தியம் செய்கின்றவர்கள் கிராமங்களில் நிறைந்து காணப்படுகிறார்கள் அப்படிப்பட்ட பலரிடம் இன்னும் கிடைக்கப் பெறாத பல சித்த வைத்தியக் குறிப்புகள்முடங்கி இருக்கின்றன.

1979 மார்ச் 3]

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற வைத்தியப் பிரிவுகளில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் தங்களுடைய பெயருக்கு முன்னால் 'டாக்டர்' என்று போட்டுக் கொள்கிறார்கள். உதாரணமாக, ஹோமியோபதியில் பட்டம் பெற்றவர்களும் டாக்டர் என்று போட்டுக் கொள்கிறார்கள்; எம். பி. பி. எஸ். படித்தவர்களும் டாக்டர் என்று போட்டுக் கொள்கிறார்கள். அதனால் மக்களுக்கு ஒரு குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே சித்தா டாக்டர், ஆயுர்வேதிக் டாக்டர், யுனானி டாக்டர் என்று போட்டால் நல்லது. டாக்டர் சின்னசாமி, டாக்டர் கோவிந்தசாமி என்று ஹோமியோபதி படித்தவர்களும், எம், பி., பி. எஸ. படித்தவர்களும் போட்டுக்கொள்கிறார்கள். ஆகவே இந்த இரு படிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகின்ற வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, டாக்டர் என்ற சொல் மருத்துவர் என்பதைக் குறிக்கும். ஒவ்வொரு துறையிலும் மருத்துவத்தில் முறைப்படி தேர்ச்சி பெற்றவர்கள் டாக்டர் என்று போட்டுக்கொள்ள தகுதி பெற்றவர்கள். யுனானி முறையில் தேர்ச்சி பெற்றவர்களும், சித்த வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றவர்களும், ஹோமியோபதியில் தேர்ச்சி பெற்றவர்களும் டாக்டர்களாக இருக்கிறார்கள். அப்படித் தேர்ச்சி பெற்றிருக்கிறவர்கள் தங்களுடைய பெயருக்குப் பின்னால் அவர்கள் பெற்றிருக்கிற கல்வித் தகுதியையும் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே மக்களுக்கு எந்தவிதமான குழப்பமும் இல்லை. பெரும்பாலானவர்கள் சித்த மருத்துவம், ஆயுர்வேதம் என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: தலைவரவர்களே, கிராம மருத்துவத்திலே பயிற்சி பெறுவது தற்போது நடைபெறுகிறதா அல்லது நிறுத்தப்பட்டிருக்கிறதா? இந்த ஆட்சியை இன்றைக்கு 'குழந்தை உள்ளத்தோடு நடைபெறுகின்ற நல்லாட்சி' என்று தாய்மார்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் சேலத்திற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் வந்திருந்தபோது, குழந்தை உள்ளம் கொண்டு நல்லாட்சி நடத்துகிறீர்கள் என்று தாய்மார்கள் பாராட்டினார்கள். மேலும் இது குழந்தைகள் ஆண்டு. ஆகவே, கிராம மருத்துவத்தில், குழந்தைகள் வைத்தியத்தில் விசேஷ பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தற்போது கிராம மருத்துவத்திற்கான பயிற்சி நடைமுறையில் நீண்ட காலமாக இல்லை. ஆகவே, அப்படி பதிவு செய்கின்ற ஒரு பிரச்சனை இல்லை. சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவத்திலே குழந்தைகளுக்கான விசேஷ பயிற்சி பெறும் பிரிவும் பயிலுவதற்கு வழிவகைச் செய்யபட்டிருக்கிறது. இன்னும் எப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் எடுத்துக்கூறினால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குழந்தைகள் ஆண்டு என்பதை நினைவுபடுத்தினார்கள். இது குழந்தைகள் ஆண்டு என்பதால் குழந்தைகள் கட்டுப்பாட்டை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, குழந்தைகள் சீரோடும் சிறப்போடும் வளர்வதோடு அவர்கள் திடகாத்திரம் உடையவர்களாகவும் வளரவேண்டும் என்பதுதான் குழந்தைகள் ஆண்டைக் கொண்டாடுவதன் நோக்கமாகும். குழந்தைகள் குறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது பெற்ற குழந்தைகள் நல்ல முறையில் பேணிக் காக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே குழந்தைகள் நலம் பேணும் இந்தக் குழந்தைகள் ஆண்டில் குடும்பநலத்திட்டம் செயல்படுவது பற்றி தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சித்த வைத்தியத்திற்குரிய பல நூல்கள் திரு. சி. டி. நாயுடு அவர்களிடமும், டாக்டர் ஆனந்தகுமார் அவர்களிடமும் இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவற்றை அரசாங்கம் பெற்று, பாதுகாத்து, பயன்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவர்கள் தனியாகத் தொழில் நடத்துதல்

*வினா எண் 215— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
டாக்டர் கே. சமரசம்
திரு. கு. ரமணி
திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
திரு. கா. அப்புனு கவுண்டர்